

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

யாழ் கலரி
ISSN - 2613 - 828X
No: 28/1, A.V. Road
Colombothurai, Jaffna
www.yarlgallery.com
yarlgallery@gmail.com


ராகஸ்வரம் கலைமன்றம்
RAKASWARAM ARTS FOUNDATION
රාගස්වරම් කලා පදනම
Regd. No. NP/M.E/CUL/JAF/JAF/2014/03


இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையம்
ශ්‍රී ලංකා බහු ආගමික සංසදය
Centre for Sri Lanka Multi Religious Dialogues
28/1, A.V.Road, Colombuthurai, Jaffna, Sri Lanka
e-mail: cslmrd@gmail.com
021 222 2797/0762 963 944/0776 510 375



நாடகத்திற்கு முனிவர் வேடமிட்ட சிறுவன் காட்டு வழியே செல்லும் போது பாதை மாறினான்
முனிவர் தோற்றத்தைக் கண்ட சிங்கம் அருகில் வந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



"சிங்கராசாவே வணக்கம். நீர் அழகாக இருக்கின்றீர்..." என்றான் சிறுவன்
"நன்றி முனிவரே, உங்கள் துணிச்சலான பேச்சு எனக்கு மிகவும் பிடித்திருக்கின்றது."
என்று சிங்கம் அவனைப் பாராட்டியது.



அப்பொழுது சிறுவன் "நான் முனிவராக இல்லாவிட்டால் என்னை வெறுப்பீரா..." என்று கேட்டான்
"இல்லை இல்லை உங்கள் துணிவுதான் எனக்கு மிகவும் பிடித்திருக்கிறது."

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என்று சிங்கம் அன்பாக கூறியது "எனது பாடசாலை விழாவில் முனிவராக நடிக்க பெற்றோர்களுடன் வந்தேன். பஸ்வண்டி பழுதடைந்து நடுக்காட்டில் தவறி வந்தேன்" என்றான்.



"காட்டில் பெற்றோர்களைப் பிரிந்து தவறி வந்த சிறுவன் நான் எனக்கு வழிகாட்டுங்கள்."
என முனிவராக வேடமிட்டிருந்த சிறுவன் தாடி மீசைகளை கழற்றினான்.
சிறுவனுக்கு சிங்கம் உதவி செய்ய முன் வந்தது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அடர்ந்த காட்டின் நடுவே சிங்கம் சிறுவனை தனது முதுகில் ஏற்றிக் கொண்டு பெற்றோர்களை தேடி புறப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




மரம் முறியும் சத்தம் கேட்டது.
கூட்டமாய் யானைகள் வந்து சிங்கராசாவுக்கு வணக்கம் சொன்னது.
சிறுவன் வியந்து சிங்கமுடன் ஆடிப் பாடிச் சென்றனர்.




சிறுவனே சிறுவனே எங்கே போகின்றாய்
சிங்கத்தின் முதுகிலிருந்து ஏன் போகின்றாய்.
குரங்காரே குரங்காரே தேடிப் போகின்றோம்
பெற்றோர்களைக் காண நாமும் ஓடிப் போகின்றோம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பூனையாரே எலியாரே ஏன் நீங்கள் சண்டை பிடிக்கின்றீர்.
மான்களைப் போல நீங்களும் துள்ளி மகிழுங்கள்.




ஒட்டகச் சிவிங்கியார் இங்கே அழகானவர்.
காட்டிலுள்ள மிருகங்களில் உயரமானவர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தந்திரக்கார நரியார் தனியாய் போகின்றார்.
சிங்கத்தை கண்டு நரியார் பதுங்கி பதுங்கி பார்த்துப் போகிறார்.
இவ்வாறு சிறுவனும் சிங்கமும் ரசித்து ஆடிப்பாடிச் சென்றார்கள்.




காணாமல் போன சிறுவனை பெற்றோர்கள் தேடுவதை சிங்கம் கண்டு கொண்டது.
சிறுவனும் மகிழ்ந்து "அம்மா இது நல்ல சிங்கம் பயப்பட வேண்டாம்.
தங்கையே இங்கே பாரும் எனது நண்பனை அச்சமும் வேண்டாம்" என்றான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




“அன்போடு பழகினால் மிருகங்களும் நல்ல நண்பர்கள் தானே அம்மா
அன்பு இல்லாது போனால் சில மனிதர்களும் மிருகங்களாவார்கள்.
காட்டில் உள்ள சிங்கமும் கூட அன்பால் எனது நண்பருமானார்” என்றான்.



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

பாடசாலை விடுமுறை வரும் போது இனி நானும் எனது நண்பர்களும்
சிங்கராசாவைத் தேடி காட்டுக்கு வருவோம்.
மற்ற மிருகங்களையும் பார்த்து மகிழ்வோம், அன்பாய் பழகுவோம்.



"ஆபத்தில் உதவிய நல்ல சிங்கத்திற்கு நன்றி கூறுவோம்" என்றார் அம்மா.
"நல்லுறவைப் பேணியே நாம் வீடு செல்லுவோம்" என்றார் அப்பா.



பழகும் நட்பு பண்பாய் அமைந்தால் மகிழ்ச்சி பெருகுமே...
உலகம் தேடும் அமைதி கூட அன்பால் நிலைக்குமே
மனிதனும் மிருகமும் மதியால் வென்ற
"சிங்கத்தை மயக்கிய சிறுவன்" கதை இது

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நூல் பற்றிய விபரம்


| | |
|---|---|
| நூல் | : சிங்கத்தை மயக்கிய சிறுவன் (சிறுவர் கதை) |
| ஆசிரியர் | : திரு.ஜோ.ஜெஸ்ரின் |
| பதிப்புரிமை | : ஆசிரியருக்கே |
| வெளியீடு | : யாழ் களரி |
| முதற் பதிப்பு | : 2019.02.14 |
| தொலைபேசி | : 0776510375 |
| மின்னஞ்சல் | : *yarlgallery@gmail.com* |
| பக்கங்கள் | : 16 |
| விலை | : ரூபா 250.00 |
| ISBN | :978-955-41123-0-8 |


## நூலாசிரியர் பற்றி



2009 இல் "வெற்றிலை நினைவுகள்" எனும் கவிதைத் தொகுப்பிற்கு அடுத்ததாக 2019 இல் சிறுவர்களுக்கான சித்திரக்கதை மூலம் தனது இரண்டாவது நூலை வெளியிடும் ஜோ.ஜெஸ்ரின் அவர்கள் இலங்கை பல்சமய கருத்தாடல் நிலையச் சகவாழ்வுச் சங்கம் மற்றும் "ராகஸ்வரம் கலை மன்றம்" ஆகியவற்றின் இயக்குனராகச் செயற்படும் இவர் பல்-துறைக்குள் சங்கமித்துள்ளார். குறிப்பாக ஓவியம், ஒளிப்படம், கவிதை, சிறுகதை, நாடகம், போன்ற துறைகளின் ஈடுபடும் இவரது படைப்பு-க்களை வெளியிடுவதில் மகிழ்வடைகின்றோம்.


யாழ் களரி வெளியீட்டகம்,
யாழ்ப்பாணம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org